# Scheme of Post-Matric Scholarships to the Other Backward Classes for Studies in India

# இந்தியாவில் மேற்படிப்பு பயிலுகின்ற இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு கல்வி உதவித்தொகைக்கான திட்டம்

## I. OBJECTIVE

## I. நோக்கம்

இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தது முதல் படிப்பறிவு மற்றும் கல்வியை மேம்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்த சூழலில், பின்தங்கிய வகுப்பினர்களுக்கான பொருளாதார ஆதரவு மற்றும் கல்வி போதியளவு இல்லை. மேலும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும் பின்தங்கிய வகுப்பினர் அல்லாதவர்களுக்கும் எல்லா அளவிலும் ஏற்றத்தாழ்வு இருக்கிறது என அரசு அங்கீகரித்துள்ளது. நலிவடைந்த பிரிவினரின் வெற்றிகரமான முன்னேற்றத்திற்கு முக்கிய பங்காக கல்வி இருக்கிறது என்பது தெளிவாகவும் உலகளவிலும் ஒத்துக்கொண்ட ஒரு கருத்தாகும்.

பின்தங்கிய வகுப்பினர்களின் சமூகநலம் மற்றும் முன்னேற்றத்திற்கான செயற்குழுவின் சிபாரிசின் அடிப்படையில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்காக மேற்படிப்பு கல்வி உதவித்தொகை அளிப்பதற்கான புதிய திட்டத்திற்கு மத்தியரசு துவங்கியிருக்கிறது.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களைச் சார்ந்த மாணக்கர்கள் பயிலும் மேற்படிப்பு அல்லது இடைநிலை படிப்பிற்கு பிறகு அவர்கள் தங்களுடைய கல்வி பூர்த்தியாவதற்கு நிதியுதவி அளிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

## II. SCOPE

## II. வாய்ப்பெல்லை

இந்த கல்வி உதவித்தொகை இந்தியாவில் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். மேலும் இது அவர் சார்ந்திருக்கும் மாநில அரசு / யூனியன் பிரதேச அரசுகளினால் இது அளிக்கப்படும்.

அதாவது நிரந்தரமாக தங்கியுள்ளவர்களுக்கு மட்டுமே. 100% மத்திய நிதியுதவி மாநில அரசு / யூனியன் பிரதேச நிர்வாகங்களுக்கு அளிக்கப்படும்.

## III. CONDITIONS OF ELIGIBILITY

## III. தகுதிக்கான நிபந்தனைகள்

i. மாநில அரசு / யூனியன் பிரதேச அரசுகளினால் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களாக அடையாளங் கொள்ளப்பட்டிருக்கும் இந்தியக் குடியுரிமை பெற்ற அனைவருக்கும்.

ii. பின்வரும் விதிவிலக்குடன் அங்கீகாரம் பெற்றிருக்கின்ற கல்வி நிறுவனங்கள் நடத்துகின்ற இடைநிலைப் படிப்பு அல்லது அதற்கு மேற்படிப்பில் பயிலும் மாணவர்களுக்கு இந்த கல்வி உதவித்தொகை அளிக்கப்படும்

விமான பராமரிப்பு பொறியாளர்களுக்கான வகுப்பு, தனியார் விமான ஓட்டி லைசன்ஸ் வகுப்புகள், டஃபர் பயிற்சி வகுப்புகள் (இப்பொழுது ஐஎன்எஸ் ரஜேந்திரா), டெஹ்ராடூன் மிலிட்டரி கல்லூரியில் இருக்கும் பயிற்சி வகுப்புகள், மற்றும் இந்திய அளவிலும் இந்திய மற்றும் மாநிலங்கள் அளவிலும் முன்மாதிரித் தேர்வு நடக்கும் பயிற்சி மையங்கள் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி நிறுவனங்களில் உள்ள வகுப்புகள் போன்றவைகளுக்கு இந்த நிதி உதவி அளிக்கும் திட்டம் பொருந்தாது.

iii. மாநில/யூனியன் பிரதேசத்தில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களாக குறிப்பிடப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர்கள் அவர்கள் சார்ந்திருப்பதைப் பொறுத்து நிரந்தரமாக குடியிருப்பவர்கள் மற்றும் பள்ளிபடிப்பு அல்லது மேல்நிலைப் படிப்பு அல்லது ஏதாவது பல்கலைக்கழகத்தால் அல்லது இடைநிலைகல்விக்கான குழுவின் உயர்நிலை தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள்.

iv. கல்வியின் ஒரு நிலையை தேர்ச்சியடைந்தப்பிறகு கல்வியின் அதே நிலையில் உள்ள வெவ்வேறு பிரிவுகளில் படிப்பவர்கள் எ.கா. பி.ஏ பிறகு பி.எஸ்ஸி அல்லது பி.காம், பி.ஏ அல்லது

எம்.ஏ வகுப்புக்கு பிறகு மற்றொரு பாடத்தில் எம்.ஏ படிப்பவர்கள் இத்திட்டத்திற்கு தகுதியற்றவர்கள்.

v. ஒரு உயர்நிலை /மேல்படிப்பு முடித்த மாணவர்கள் வேறு வகுப்பில் சேருவதற்கு எ.கா. எல்எல்பீ முடித்தப் பிறகு பீடி/பீ.எட் படிப்பதற்கு சேர்ந்தவர்கள் தகுதியடையமாட்டார்கள்

vi. மேல்நிலைப் பள்ளி படிப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் அல்லது பல்நோக்குடைய உயர்நிலைப்பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பை படித்துகொண்டிருப்பவர்கள் தொடர்ச்சியான பள்ளிவகுப்புகளில் படித்துக் கொண்டிருப்பதனால் தகுதியடையமாட்டார்கள், எனினும், அம்மாதிரியான வகுப்புகளில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் மெட்ரிகுலேசனுக்கு இணையான வகுப்பாகவும் மற்றும் பத்தாவது வகுப்பு தேர்ச்சியானவர்கள் மற்ற வகுப்புகளில் சேர்ந்தவர்கள் மேல்நிலை படிக்கும் மாணவர்களாக கருதப்பட்டு கல்வி உதவித்தொகை பெறுவதற்கு தகுதியாவார்கள்.

vii. மருத்துவத்தில் முதுகலைப் பட்ட வகுப்புகளில் பயிலும் சமயத்தில் தொழில்முறையில் பணிபுரியாமல் இருந்தால் அவர்கள் தகுதியுள்ளவர்களாக கருதப்படுவார்கள்.

viii. கலை/அறிவியல்/வணிகவியலில் இளங்கலை/முதுநிலைத் தேர்வுகளில் தேர்ச்சியடைந்தவர்கள் அல்லது தேர்ச்சியடையாத மாணவர்கள் அங்கீகாரம் பெற்றிருக்கும் ஏதாவது உயர்நிலை படிப்பு அல்லது பயிற்சி சான்றிதழ்/பட்டயம்/ பட்ட வகுப்புகளில் சேர்ந்தவர்கள் இக்கல்வி உதவித்தொகை பெறுவதற்கு தகுதியாவார்கள். குரூப் A-வில் கூறியிருக்கும் வகுப்புகளில் தோல்வியுற்றாலோ வகுப்புகளில் ஏதேனும் மாற்றம் செய்திருந்தாலோ நிதி உதவிக்குத் தகுதியற்றவர்களாகிறார்கள்.

ix. தொலைத்தூரக் கல்வி மூலமாக கல்வி பயிலும் மாணவர்கள் திரும்பப் பெற முடியாத கட்டணத்தை ஈடுசெய்வதற்கு தகுதியுள்ளவர் ஆவார். தொலைத்தூரக்கல்வி என்பது தொலைத்தூரம் மற்றும் தொடர்நிலைக் கல்வியை உள்ளடங்கியதாகும். திரும்பப்பெற முடியாத கட்டணத்தை ஈடுசெய்வது தவிர, வருடத்திற்கு ரூ.500/ முக்கியமான /

அதற்கென பட்டியிலிடப்பட்டிருக்கும் புத்தகங்கள் வாங்குவதற்கு தகுதியடைவார்கள்.

x. வேலைக்கு செல்லும் மாணவர்களுடைய வருமானத்தோடு சேர்ந்து பெற்றோர்/பாதுகாவலருடைய வருமானம் வருடத்திற்கு ரூ.44,500/- க்கு மிகாமல் இருப்பவர்கள், உயர்கல்வி படிப்புக்கான கட்டாயமாக செலுத்தவேண்டிய திருப்பிப் பெறமுடியாத கட்டணங்கள் அனைத்தையும் உதவித் தொகையாகப் பெறுவதற்கு தகுதியுள்ளவர்கள் ஆவார்கள்.

xi. ஒரே பெற்றோர்/பாதுகாவலருடைய இரண்டு குழந்தைகள் மட்டும் கல்வி உதவித்தொகை பெறுவதற்கு தகுதியாகிறார்கள். எனினும் இந்த வரம்பு பெண் குழந்தைகளுக்குப் பொருந்தாது. ஒரே பெற்றோர் / பாதுகாவலருடைய இரண்டு ஆண் பிள்ளைகள் கல்வி உதவித்தொகை பெற்றிருந்தாலும் அது பெண் குழந்தைகளின் கல்வி உதவித் தொகையை பாதிக்காது.

xii. இந்த திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறுபவர் வேறு ஏதாவது கல்வி உதவித்தொகை/பணத்தொகை பெறுபவராக இருக்ககூடாது, இரண்டு கல்வி உதவித்தொகை / பணத்தொகையில் ஒன்றை பெறுவதற்கான தேர்வை மாணவர்கள் செய்துகொள்ளமுடியும், இதில் எது அதிகமான பயனை அளிக்கக்கூடியதாக இருக்கிறாதோ அதை தேர்வு செய்து கல்விநிறுவன தலைமையின் மூலமாக அதிகாரப்பூர்வமாக அதிகாரிகளுக்கு, தான் தேர்ந்தெடுத்த தெரிவை பற்றியதை தெரிவிக்க வேண்டும். கல்வி உதவித்தொகை / பணத்தொகை அவன் / அவள் ஏற்றுக்கொண்ட தேதியிலிருந்து வேறு கல்வித்தொகை இந்த திட்டத்தில் பெறமுடியாது. எனினும் மாணவர், மாநில அரசிடமிருந்து இலவச தங்குமிடம் அல்லது பணஅளிப்பு அல்லது அவசர தேவைக்கான நிதியுதவியை ஏற்றுக்கொள்ளமுடியும் அல்லது வேறு ஏதாவது வழிவகையிலிருந்து புத்தகங்கள், சாதனங்கள் கொள்முதல் செய்தல் பெறமுடியும் அல்லது தங்குவதற்கு மற்றும் உணவு செலவிற்காக செலவிடப்பட்டதை இந்த திட்டத்தின் கீழ் பெறமுடியும்.

xiii. அடைவுத் தேர்வு பயிற்சி மையங்கள் ஏதாவதில் நிதியுதவியுடன் பயிற்சியை முன்னர் பெற்றமைக்கு அரசிடமிருந்து தகுதியுள்ளவராக ஆகமுடியாது.

xiv. வேலைக்கு செல்லாத மாணவர்களுடைய பெற்றோர்/பாதுகாவலருடைய வருமானம் அனைத்து வழிவகையிலிருந்தும் வருடத்திற்கு ரூ.44,500/- க்கு மிகாமல் இருந்தால் இந்த திட்டத்தில் கல்வி உதவித் தொகை பெறுவதற்கு தகுதியுள்ளவர்கள் ஆவார்கள்.

குறிப்பு 1: பெற்றோர்களில் ( அல்லது திருமணமான மாணவியின் வேலைவாய்ப்பற்ற கணவர்) ஒருவர் உயிருடன் இருந்தால், பெற்றோர்/கணவரின், அனைத்து வழிவகையிலிருந்தும் வருவாய்கள் மற்ற குடும்ப உறுப்பினர்களின் வருமானம் இருக்கும்பட்சத்திலும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். வருமானம் உறுதியளிக்கும் படிவத்தில், அதிகாரப்பூர்வமாக இந்த அடிப்படையில் தான் வருமானம் வெளிப்படுத்தப்படும். பெற்றோர்கள் இருவரும் (அல்லது திருமணமான மாணவியின் வேலைவாய்ப்பற்ற கணவர்) இறந்திருக்கும் பட்சத்தில், கல்வி பெறுகின்ற மாணவர்/மாணவிக்கு ஆதரவளிக்கும் பாதுகாவலரின் வருமானம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். வருமானத்தை ஈட்டக்கூடிய பெற்றோர்களில் ஒருவர் துரதிருஷ்டமாக இறந்திருந்தால் பெற்றோர்களின் வருமானம் பாதிப்படைந்த மாணவர்/மாணவியின் வருமானம் இந்த திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டிருக்கின்ற வருமான உச்சவரம்பை பெற்றிருப்பின், துயரச்சம்பவம் நடைபெற்ற மாதத்திலிருந்து தகுதியாவதற்கு மற்ற விதிமுறைகள் பூர்த்தியாகும் பொழுது இந்த கல்வி உதவித்தொகைக்கு தகுதியானவர் ஆவார். இம்மாதிரியான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுவதற்கு அதற்கான கடைசி தேதி முடிவடைந்த பிறகும் கருணை அடிப்படையில் பெறப்படும்.

குறிப்பு 2:வருமானவரி காரணத்திற்காக வீட்டு வாடகை அகவிலைப்படியை விலக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தாலும் மாணக்கர்களின் பெற்றோர்களினால் பெறப்படும் வீட்டு வாடகை அகவிலைப்படியை வருமானம் கணக்கீடு செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது

குறிப்பு 3: வருமான சான்றிதழ் ஒரே ஒரு முறை மட்டும் தேவையாக இருக்கிறது, அதாவது ஒரு வருடத்திற்கு மேல் படிப்பு தொடர்ந்தாலும், வகுப்பில் அனுமதிக்கப்படும் நேரத்தில் மட்டும் சான்றிதழ் அளித்தால் போதுமானது.

## IV. VALUE OF SCHOLARSHIP

## IV. கல்வி உதவித்தொகையின் மதிப்பு

இத்திட்டத்தின் உதவித் தொகையானது பராமரிப்பு படி, கண்தெரியாத மாணவர்களுக்காக படித்துக் காட்டுபவர் கட்டணங்கள், ஈடுசெய்யக்கூடிய கட்டாயமாக திருப்பி பெறமுடியாத கட்டணங்கள், படிப்பு சுற்றுலா கட்டணங்கள், ஆய்வேடு தட்டச்சு செய்தல் / அச்சிடுதலுக்கான கட்டணங்கள் மற்றும் தொலைதூர வகுப்பு, படிப்பு காலக்கட்டம் முழுவதுமாக படிக்கும் மாணவர்களுக்கான புத்தகப்படி, போன்றவற்றிற்குப் பொருந்தும். மேலும் விவரங்கள் பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ளது:-

### i) Maintenance Allowance

i) பராமரிப்பு படி

| **Course of (1)**<br>**வகுப்பு** (1) | **(Rs. Per Month) Rate of Maintenance Allowance**<br>**பராமரிப்பு படியின் அளவு** (மாதத்திற்கு ரூ.) | |
|---|---|---|
| | **Hostlers (2)**<br>**விடுதியில் தங்கி பள்ளிக்கு செல்பவர்கள்(2)** | **Day Scholars (3)**<br>**வீட்டிலிருந்து பள்ளிக்கு செல்பவர்கள்(3)** |
| **Group A**<br>**குழு A**<br><br>மருத்துவம்/இந்திய மருத்துவத்தில் பட்ட அளவிலான வகுப்புகள் உள்ளடங்கிய | 425 | 190 |

| | | |
|---|---|---|
| பொறியியாளர் வகுப்புகள், பி.ஏ.எம்&எஸ் மற்றும் மருத்துவத்தில் ஓமியோபதி ஆயுர்வேதம்/யூனானி/போன்றவற்றில் ஒப்பிடுசெய்யத்தக்க வகுப்புகள்.<br><br>விவசாயம்/பீவிஎஸ்சி/பீஎப்எஸ்சி (மீன் துறை)<br><br>விவசாயம் மற்றும் கால்நடைதுறையில் உயர்கல்வி வகுப்புகள் மற்றும் பட்ட வகுப்புகளைப் போல அனைத்து உயர்கல்வி படிப்புகள் மற்றும் உயர்தொழில்நுட்ப வகுப்புகள்) | | |
| **Group B**<br>**குழு B**<br><br>இந்திய மருத்துவத்தில் பட்டய அளவிலான வகுப்புகள் மற்றும் ஆயுர்வேதம், யூனானி / திப்பியாவில் ஒப்பீடு செய்யத்தக்க வகுப்புகள் மற்றும் ஓமியோபதி முறையிலான மருத்துவம். பொறியியல், தொழில்நுட்பம், கட்டிடக் கலை, மருத்துவம், பட்டய வகுப்பில் அச்சு தொழில்நுட்பம், தொழில்நுட்ப வரைப்படங்கள் வரைபவர், நில அளவையாளர், வணிகதொழில் முறையிலான விமானம் ஓட்டுவதற்கான லைசன்ஸ், ஓட்டல் மேலாண்மை கேட்டரிங் தொழில்நுட்பம் மற்றும் நடைமுறைப் பயன்பாட்டு | 290 | 190 |

| | | |
|---|---|---|
| ஊட்டச்சத்து வகுப்புகளில் பட்டயம் மற்றும் உயர்கல்வி வகுப்புகள்.<br><br>செவிலியர் மற்றும் மருந்தகத்தில் பட்டம் மற்றும் முதுநிலை பட்ட வகுப்புகள். கம்பியில்லா மற்றும் தொலைக்காட்சி இணைப்பாளர்கள் / ஒலிப்பதிவு மற்றும் ஒலிப் பொறியியலான இயங்கும் ஒளிப்படம், ஒளிநகல், சினிமா இயக்குதல்/நடிப்பு, திரைக்காட்சி / திரைக்கதை / வணிக மேலாண்மை, ஆக்கச்செலவு / செயல் கணக்கில் பட்டம் / முதுநிலை பட்டய வகுப்புகள். அறிவியல் பாடங்களில் முதுநிலை வகுப்புகள். | | |
| **Group C**<br>**குழு C**<br><br>பொறியியல்/தொழில்நுட்பம் / கட்டிடக்கலை மற்றும் மருத்துவத்தில் சான்றிதழ் வகுப்புகள் விவசாயம், மருந்தகம், கால்நடை அறிவியல், மீன் துறை, பால்பண்ணை முன்னேற்றம், சுகாதாரம் மற்றும் பொது உடல்நலம், சுகாதார ஆய்வாளர் வகுப்பு, கிராம சேவைகளுக்கான வகுப்புகள், கூட்டுறவு மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றில் பட்டயம் மற்றும் சான்றிதழ் வகுப்புகள், நாக்பூர் தேசிய தீ பணிக்கான கல்லூரியில் துணை | 290 | 190 |

| | | |
|---|---|---|
| அலுவலருக்கான நூலக அறிவியல் வகுப்பு பட்டயம் மற்றும் சான்றிதழ்,<br><br>ஆசிரியர், பயிற்சியில் பட்டம்/முதுநிலை பட்டயம் மற்றும் முதுநிலை வகுப்புகள் நூலக அறிவியல் மற்றும் உடல்கல்வி, இசைக்கான கலை மற்றும் சட்டம், கைத்தொழில் பயிற்சியாளருக்கான வகுப்பு, ஓட்டல் மேலாண்மை கேட்டரிங் தொழில்நுட்பம் மற்றும் நடைமுறைப் பயன்பாட்டு ஊட்டச்சத்து வகுப்புகளில் சான்றிதழ் வகுப்புகள், பயணிகள் போக்குவரத்து மேலாண்மை, மருந்தகத்தில் இணையான பட்டம் I, கலை மற்றும் வணிகவியல் வகுப்புகளில் முதுநிலை. | | |
| **Group D**<br>**குரூப் D**<br>இளங்கலை வரையிலான பொதுவான பட்டப்படிப்புகள் (2வது வருடம் மற்றும் அதற்கு மேலாக) | 230 | 120 |
| **Group E**<br>**குரூப் E**<br>10+2 இடைநிலை வகுப்புகளில் 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்புகள் மற்றும் பட்ட படிப்பு வரையிலான பொது வகுப்புகளின் முதலாம் ஆண்டு முதல் பட்டதாரி வரை | 150 | 90 |

**Note: 1 Commercial Pilot License Course(CPL)**

**குறிப்பு: 1 வணிகஅடிப்படையிலான விமானஓட்டி உரிமத்திற்கான படிப்பு ( சி.பி.எல்)**

குழு B-யின் கீழ் சி.பி.எல் வகுப்பு உள்ளடங்கியிருக்கிறது. ஒரு வருடத்திற்கு 20 எண்ணிக்கை வரை கல்வி உதவித்தொகை சி.பி.எல்-க்காக அளிக்கப்படும். மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்றதிலிருந்து, சம்பந்தப்பட்ட மாநில அரசுகள்/யூனியன் பிரதேச நிர்வாகங்கள்., இந்தத் திட்டத்தின் கீழ் அவர்களுடைய தகுதியை அறிந்துகொள்வதற்காக அவைகளை கூர்ந்து நோக்கி சமூக நலம் & அதிகாரத் துறைக்கு ஒவ்வொரு வருடமும் சிபிஎல் பயிற்சிக்காக அவர்களுடைய பெயருடன் தகுதியான விண்ணப்பங்களின் எண்ணிக்கையை அறிவிக்க வேண்டும் ( அமைச்சகத்துக்கு அவர்களுடைய விண்ணப்பங்களை அனுப்பவேண்டியதில்லை). இந்தத் தகவலை பெற்றதிலிருந்து, நாடு முழுவதிலிருந்து 20 நபர்கள் வரை முதலில் விண்ணப்பித்தவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு சமூக நீதி மற்றும் அதிகாரத் துறை அளிக்கும். குரூப் பீ வகுப்புகளுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் அளவிற்கு பராமரிப்பு படி தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு வீட்டிலிருந்து வருகை புரிபவர்களுக்கு மாதத்திற்கு ரூ.190ம், விடுதியில் தங்கி படிப்பவர்களுக்கு ரூ.290 அளிக்கப்படும். கூடுதலாக, அனைத்து கட்டாய கட்டணங்கள், விமானப் பயணக் கட்டணங்கள் உள்பட அளிக்கப்படும்.

குறிப்பு **2**: எம்.பில் மற்றும் பி.எச் டீ வகுப்புகள் முதுநிலை பட்டதாரி வகுப்புகள். இந்த குரூப்புகளின் கீழ் வகுப்புகளைப் பொருத்து, குரூப் “ஏ“, “பீ“, “சி“ குழுவுக்கு அளிக்கப்படும் பராமரிப்பு படியின் அளவு மாணவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.

குறிப்பு 3: இலவசமாக தங்குவதற்கு மற்றும் / அல்லது உணவு உட்கொள்வதற்காக தங்கி பயிலும் மாணவர்களுக்கு பராமரிப்பு கட்டணங்கள் தகுதி பெறுதவதற்கு விடுதியில் தங்குபவர்களின் அளவில் மூன்றில் ஒரு 1/3 பங்கு அளிக்கப்படும்.

### ii) Reader Charges for blind students (Blind Scholars)

ii) கண் பார்வையற்றவர்களுக்கான வாசிப்பு கட்டணங்கள் (கண் பார்வையற்ற மாணவர்கள்)

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு "வாசிப்பு கட்டணங்களாக" கூடுதல் தொகையை கண் பார்வையற்ற மாணவர்களுக்கு அளிக்கப்படும்.

| குழு | வாசிப்பாளர் கட்டணம் ஒரு மாதத்திற்கு |
|---|---|
| Group A,B,C<br>குரூப் ஏ, பீ, சி | 100 |
| Group D<br>குரூப் டி | 75 |
| Group E<br>குரூப் ஈ | 50 |

### iii) Fees

(iii) கட்டணங்கள்

கல்வி நிறுவனம்/பல்கலைக்கழகம்/குழுவிற்கு மாணவர்களால் சேர்க்கை/பதிவு, பாடப்பயிற்சி அளித்தல், விளையாட்டு, கூட்டமைப்பு, நூலகம், பத்திரிக்கை, மருத்துவ தேர்வு மற்றும் கட்டாயமாக செலுத்தக்கூடிய கட்டணங்கள் அனைத்தும் நிதி உதவியாக அளிக்கப்படும். திருப்பி பெறக்கூடிய கட்டணங்களான அவசர நிதி, பாதுகாப்பு வைப்புநிதி போன்றவைகள் இந்த நிதி உதவித் திட்டத்தில் அடங்காது.

### iv) Study Tours

கல்வி சுற்றுலா

மாணவர்/மாணவியின் பயிலும் கல்விக்காக கல்வி சுற்றுலா முக்கியமென கல்வி நிறுவனத்தின் தலைவர் சான்றிதழ் அளிக்கும் பட்சத்தில், உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு போக்குவரத்து கட்டணங்களாக செய்த செலவு வரையறுக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு அதிகப்பட்சமாக ரூ.500/- வரை சுற்றுலா கட்டணமாக அளிக்கப்படுகிறது.

## V) Thesis Typing /Printing charges

V) ஆய்வேடு தட்டச்சு/அச்சடிக்கும் கட்டணங்கள்

கல்வி நிலைய தலைவரின் சிபாரிசு மீது ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் மாணவர்களுக்காக அதிகப்பட்சமாக ரூ.600 ஆய்வேடு/அச்சடிக்கும் கட்டணமாக அளிக்கப்படும்.

## V. SELECTION OF CANDIDATES

## விண்ணப்பதாரரை தேர்ந்தெடுத்தல்

இந்த திட்டத்தின் பத்தி III-ல் விவரிக்கப்பட்டிருக்கும் தகுதிக்கான நிபந்தனைகளைப் பொறுத்து அனைத்து தகுதிவாய்ந்த இதர பின்தங்கிய வகுப்பினர்களுடைய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும். ஒரு மாநிலத்தைச் சேர்ந்த மாணவர் மற்றொரு மாநிலத்தில் கல்வி பயிலும் பட்சத்தில் அவர் சார்ந்திருக்கும் மாநிலத்தில் உள்ள தகுதிவாய்ந்த அதிகாரத்தினரால் கல்வி உதவித்தொகை அளிக்கப்படும். அதேபோல கட்டணங்களில் சலுகை அல்லது மற்ற சலுகைகள் பெறுவதற்கும் அவர்கள் சொந்த மாநிலத்திலேயே படித்துக் கொண்டிருப்பதைப் போல கருதுவார்கள்.

## VI. DURATION AND RENEWAL OF AWARDS

## காலவரம்பு மற்றும் கல்வி உதவிக்காக புதுப்பித்தல்

i. மாணவர்களின் நன்னடத்தை மற்றும் தொடர்ச்சியாக வருகை புரிதலை பொறுத்து அவர்களுடைய வகுப்புகள் முடிந்திருக்கும் நிலையிலும் கல்வி உதவித்தொகை அளிக்கப்படும். பயிலும் காலத்தின் வருடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுதும் இந்த கல்வி உதவித்தொகை தொடரும், பல்கலைக்கழகங்கள் அல்லது கல்வி நிறுவனங்கள் நடத்தப்படும் தேர்வுகள் எதுவாயினும் அடுத்த உயர்வகுப்புக்கு மாணவர் தேர்ச்சியடையும் பொழுது கல்வி உதவித்தொகை புதுப்பிக்கப்படும்.

ii. இதர பின்தங்கிய வகுப்பினர்களுடைய ஒரு மாணவர் குரூப் ஏ வகுப்புக்கான தேர்வில் முதல் கட்டமாக தவறிவிடும்பொழுது, கல்வி உதவித்தொகை புதுப்பிக்கப்படலாம். ஏதாவது வகுப்பில் இரண்டாம் முறையாக அல்லது தொடர்ச்சியாக

தவறிவிடும்பொழுது அடுத்த உயர்வகுப்பிற்கு செல்லும் வரை அவர்/அவளுடைய செலவுகளை மாணவரே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

iii. நோய் மற்றும் அல்லது வேறு ஏதாவது எதிர்பாராத நிகழ்வின் காரணமாக வருடாந்திர தேர்வு எழுத மாணவருக்கு இயலாமல் போகும் பொழுது, மருத்துவ சான்றிதழ்/ அல்லது மற்ற தேவையான போதிய சான்றுடன் கல்வி நிறுனத் தலைவர் திருப்தியடையும் விதத்தில் சமர்ப்பித்து தேர்வு எழுதியிருந்தால் மாணவர் தேர்ச்சியடைந்து விட்டிருப்பார் என அவர்/அவள் சான்றிதழ் அளிக்கும் பொழுது மாணவருடைய கல்வி உதவித்தொகை புதுப்பிக்கப்படும்.

iv. பல்கலைக்கழகம் / கல்வி நிறுவனத்தின் ஒழுங்குமுறைகளின் படி, ஒரு மாணவர் கீழ் வகுப்பில் தேர்ச்சியடையாமல் இருந்தும் அடுத்த உயர் வகுப்பிற்கு அவன் / அவள் முன்னேற்றமடைந்து கீழ் வகுப்பு தேர்வை பிறகு எழுதுவது தேவையாகிறது மற்றும் எந்த வகுப்பிலிருந்து தேர்ச்சி பெற்றிருக்கிறாரோ அந்த வகுப்பிற்கான கல்வி உதவித்தொகை பெறுவதற்கு தகுதியாகிறார்

## VII. PAYMENT

## செலுத்தவேண்டியவை

i. ஏப்ரல் 1-ஆந் தேதியிலிருந்து அல்லது சேர்க்கையான மாதத்திலிருந்து இதில் எது கல்வியாண்டின் இறுதியில் முடிவடையும் தேர்வில் பின் வருகிறதோ, பராமரிப்பு படி கட்டணங்கள் பெறுவதற்கு ( விடுமுறை நாட்கள் உள்பட) தகுதியாகிறார், மாதத்தில் 20ஆந் தேதிக்கு மேல் மாணவரின் சேர்க்கை நடைபெறும் பொழுது சேர்க்கை மாதத்தின் தொடர்ந்து வருகின்ற மாதத்திலிருந்து உதவித்தொகை வழங்கப்படும்.

ii. கடந்த வருடத்தில் வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகையை புதுப்பிக்கும்பட்சத்தில், கல்விவகுப்பு தொடர்வதாக இருப்பின், கடந்த வருடத்தில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கும் மாதத்தை தொடர்ந்து பராமரிப்பு படிகள்

வழங்கப்படும். ( எ.கா. மேல்நிலை 11 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு )

iii. அனைத்து மாணவர்களும் அனுமதிக்கப்பட்ட பராமரிப்பு படியிலிருந்து தேவையான புத்தகங்கள், எழுதுப்பொருட்கள் இன்னும் பிறவற்றை கொள்முதல் செய்வார்கள். புத்தகங்கள், எழுதுபொருட்கள இன்னும் பிறவற்றை மாணவர்கள் கொண்டிருக்கவில்லையென்று கல்வி நிறுவனத்தின் தலைவரால் அறிவிப்பு செய்யும் பட்சத்தில்., கல்வி உதவித் தொகையை அனுமதிக்கும் அதிகாரியின் விருப்பப் படி உதவித் தொகை குறைக்கப்படும்.

iv. மாணவர்கள் அவர்கள் சார்ந்திருக்கும் மாநிலம் / யூனியன் பிரதேச நிர்வாக அரசினரால் அவர்கள் விதித்திருக்கும் விதிமுறைகளின் படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை அளிக்கப்படும்.

## VIII. OTHER CONDITIONS FOR THE AWARD

## உதவிக்கான மற்ற நிபந்தனைகள்

i. கல்வி உதவித் தொகை மாணவர்களின் நடத்தை மற்றும் திருப்திகரமான முன்னேற்றத்தை சார்ந்ததாகும். எந்த நேரத்திலும் மாணவர்களின் நடத்தை அல்லது திருப்திகரமான முன்னேற்றம் இல்லாத நேரத்தில் அல்லது குற்றம் புரிந்திருப்பின் அல்லது குறைவான வருகைப் பதிவேடு, அதிகாரபூர்வத்தினரின் அனுமதியில்லாமல் வருகை பதிவேட்டில் ஒழுங்குமுறையற்றதாக இருத்தல் ஆகியவைகள் கல்வி நிறுவனத் தலைவரால் அறிவிக்கப்பட்டால் கல்வி உதவித் தொகை அனுமதிக்கும் அதிகாரிகளால் உதவித் தொகையை ரத்து செய்யவோ நிறுத்தி வைக்கவோ அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு நிறுத்திவைக்கவோ முடியும்.

ii. பொய்யான தகவல்களை அளித்து கல்வி உதவித்தொகையை ஒரு மாணவர் பெற்றிருப்பது அறியும் பட்சத்தில் அவர்/அவளுடைய கல்வி உதவித்தொகை நிராகரிக்கப்படும் மேலும் சம்பந்தப்பட்ட மாநில அரசின் விருப்பத்திற்கிணங்க அளிக்கப்பட்ட கல்வி உதவித் தொகையை திருப்பி

வசூலிக்கப்படும். மேலும் கல்வி உதவித்தொகையை எந்த திட்டத்தின் கீழும் அந்த மாணவர் எப்பொழுதும் பெற முடியாதபடி தகுதியற்றவர்களின் பட்டியலில் சேர்க்கப்படுவர்..

iii. மாநில அரசின் முன் அனுமதியில்லாமல் ஒரு மாணவர் கல்வி வகுப்பின் பாடத்தை மாற்றும் பொழுது எந்த வகுப்பிற்காக கல்வி உதவித்தொகை அளிக்கப்பட்டிருக்கிறதோ அது நிராகரிக்கப்படும். அம்மாதிரியானவர்களை பற்றிய தகவலை கல்வி நிறுவனத் தலைவர் அறிவிக்கவேண்டும் மற்றும் மாநில அரசின் விருப்பத்திற்கிணங்க கல்வி உதவித்தொகை அளிப்பதை நிறுத்தி, வசூலிக்கவேண்டும்.

iv. கல்வியாண்டின் இடைப்பட்ட காலத்தில், கல்வி உதவித்தொகை அளிக்கப்பட்ட ஆண்டில் மாணவர் வகுப்பை தொடரவில்லையென்றால் மாநில அரசின் விருப்பத்தின் படி கல்வி உதவித்தொகையை மாணவர் திருப்பி செலுத்தும் பொறுப்புடையவராகிறார்.

v. இந்திய அரசின் விருப்பத்தின் படி எந்த நேரத்திலும் விதிமுறைகள் மாறும்.

## IX. ANNOUNCEMENT OF THE SCHEME

## திட்டத்தைப் பற்றிய அறிவிப்பு

மே - ஜூன் மாதங்களுக்குள் அனைத்து மாநில அரசுகள்/யூனியன் பிரதேச நிர்வாகத்தினர்கள் அறிவிப்பு செய்யவேண்டும், திட்டத்தின் விவரங்கள் மற்றும் மாநிலத்தின் முன்னோடியாக இருக்கும் தினசரி பத்திரிகைகளில் ஒரு விளம்பரம் அளிப்பதன் மூலமும் மற்ற பொருத்தமான விளம்பர உத்திகள் மூலமாகவும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படும். மாணவர்கள் அவர்கள் சார்ந்திருக்கும் மாநில/ யூனியன் பிரதேசப்பகுதிகளுக்கு விண்ணப்ப படிவங்கள் மற்றும் மற்ற விவரங்களுக்கான அனைத்து கோரிக்கைகளையும் அனுப்பவேண்டும். விண்ணப்பங்களை பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்கு முன்னர் அதிகாரபூர்வ அதிகாரிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்கவேண்டும்.

## X. PROCEDURE FOR APPLYING

## விண்ணப்பிக்கும் முறை

i) கல்வி உதவித்தொகைக்காக ஒரு விண்ணப்பத்துடன் இருக்கவேண்டியவை:

a. கல்வி உதவித் தொகைக்காக அதற்கென இருக்கும் படிவத்தில் விண்ணப்பத்தின் ஒரு நகல் ("புதிய" மற்றும் புதுப்பிக்கும் கல்வி உதவித்தொகைக்காக அதற்கென இருக்கும் தனித்தனியான விண்ணப்ப படிவங்கள் இருக்கவேண்டும்).
b. மாணவரின் கையெழுத்திடப்பட்ட பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் ஒன்று இருக்க வேண்டும்.
c. சான்றிதழ்கள் / பட்டயம் / பட்டம் இன்னும் பிற இவற்றைச் சார்ந்த அனைத்து தேர்வுகளையும் தேர்ச்சியடையந்த சான்றிதழ்களின் நகல் ஒன்று அதில் உண்மைதன்மை உறுதியளிக்கப்பட்டு இருக்கவேண்டும்
d. தாசில்தார் நிலைக்குக் குறைவாக இருக்கும் அதிகாரபூர்வ வருவாய் அலுவலர் ஒருவரால் கையெழுத்திடப்பட்ட சாதி சான்றிதழ் (மூலப்படிவம்) ஒன்று.
e. பெற்றோர்கள் / பாதுகாவலர்களால் உறுதியளிக்கப்பட்ட அனைத்து வழி வகையிலிருந்து கிடைக்கக்கூடிய ஒரு வருமான அறிவிப்பு
f. இந்த திட்டத்தின் கீழ் கடந்த வருடம் மாணவர் கல்வி உதவித் தொகை பெற்றிருப்பின், உதவித் தொகை பெற்றதற்கான ஒப்புகையை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு சார்ந்த கல்வி நிறுவனத்தால் உறுதி செய்தலுக்கான கையொப்பமிடப் பட்டிருக்க வேண்டும்.

ii) பூர்த்தி செய்யப்படவேண்டிய அனைத்தையும் பூர்த்தி செய்யப்பட்டு அவர் சார்ந்திருக்கும் கல்வி நிறுவனத்திற்கு மாணவரால் விண்ணப்பம் சமர்ப்பிக்கவேண்டும் மற்றும் மாநில அரசு/ யூனியன் பிரதேசப்பகுதி நிர்வாகத்தினரால் இதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் அலுவலருக்கு முகவரியிட்டு அவர்கள் அவ்வப்பொழுது வெளியிடும் செயல்துறை கட்டளைகளுடன் படி சார்ந்திருக்கும் அரசுகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

iii) நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் முழுமையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்களும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

## XI. MONITORING

## கண்காணித்தல்

திட்டத்தை செயல்படுத்தும் முகவர்களிடமிருந்து விரிவான தகவல்களை பெறுவதின் மூலமாக திட்டத்தின் நிதிசார்ந்த மற்றும் செயல்பாடுகளின் நன்னிலையை சரிப்பார்க்க முடியும். செயல்முறை கண்ணோட்டோமாக திட்டத்தின் கீழ் பயன் அடையும் பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கையை வகுப்புவாரியாக மற்றும் பாலினவாரியாக இந்த திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனங்கள் தெரிவிப்பது அவசியம். நிதியாண்டில் தற்பொழுதைய நிதியாண்டிற்காக தீர்மானிக்கப்பட்ட செலவினங்களை உரிய நிறுவனங்கள் சமர்ப்பிக்கும். திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனங்கள் புதிதாக தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை சமர்ப்பிக்க வேண்டும்.

## XII. EVALAUTION

## மதிப்பீடு

இத்திட்டம் செயல்பாடுகளின் அடிப்படையில் மத்திய அரசு சமூக நீதி அதிகாரம் வழங்குவதில் அமைச்சகத்தின் நிதி உதவி பெறும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட . ஆராய்ச்சி நிறுவனங்கள் / முகமைகளால் மதிப்பீடு செய்யப்படும்